21



# THE OBSERVANCE OF THE SABBATH.

[Chiefly taken from No. 33. of the Miscellaneous Series, of the publications of the Madras Religious Tract Society. It shows that giving the 4th commandment was a blessing—that all are bound to keep it—and the advantages of keeping it.]

# ஓய்வுநாள் அனுட்டிப்பு.

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறுநாளும் நீ வேலைசெய்து உன் கிரியைகளை எல்லாந் நடத்துவாயாக. ஏழாந்நாளோ உன் தேவனாகிய பராபரனுடைய ஓய்வுநாள். அதிலே நீயானும் உன் மகனானும் உன் மகளானும் உன் வேலைகாரனானும் வேலைகாரியானும் உன் மிருகசீவனானும் உன் வாசல்களிலிருக்கிற பரதேசியானும் இயாதொரு வேலையுஞ் செய்யப்படாது. ஏனென்றாற் கருத்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி ஏழாநாளிலே ஓய்ந்திருந்து அந்த நாளைப் பரிசுத்தமாக்கினாரென்று மோசே எழுதின. ௨. ஆகமம். ௨௰. அதி. ௮ம். வசனந் துடங்கி, ௰௧ம். வசனம்வரைக்குஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [3,000
1844.

இந்தவசனங்களைக்கொண்டு,

முதலாவது. கருத்தர் இந்தக் கட்டளையை மனிதருக்கு அருளிச்செய்தது நன்மையாய் இருக்கிறதென்றும்.

௨. இதைக் கைக்கொள்ள எல்லாருங் கடனாளிகளாய் இருக்கிறார்களென்றும்.

௩. ஒய்வுநாளை ஆசரிக்கிற விதம் என்னவென்றும்.

௪. இதை ஒழுங்காய் ஆசரித்துக் கைக்கொள்வதினால் உண்டாகிற பிரயோசனம் என்னவென்றும் நான்கு காரியங்களை எடுத்துச் சொல்லுவேன்.

இந்நான்கு காரியங்களையும் விபரித்துக் காட்டுவதினால் வாசிப்பவர்கள் கேட்பவர்கள் யாவருக்குள்ளும் பலனுண்டாகப் பராபரன் அனுக்கிரகஞ் செய்வாராக.

---

## முதலாவது.

கருத்தர் இந்தக் கட்டளையை நமக்கு அருளிச் செய்தது நன்மையாயிருக்கின்றதென்பது.

கருத்தர் நமக்கு நன்மையைச் செய்கிற உபகாரியுந் நம்மை ஆண்டுகொள்ளுகிற எசமானுமாய் இருக்கிறதால் அவரை அன்போடே சிந்தித்து அவருக்கு ஆராதனை செலுத்த வேண்டிய கடனாளிகளாய் இருக்கிறோம். நாம் இப்பிரவஞ்சத்துக்கு அடுத்த அலுவல்களை

மாத்திரம் எப்பொழுதும் பார்த்து நடப்பித்துக்கொண்டு வந்தால் பொருளாசையும் உலக சிந்தையும் நம்மிற் பெருகிப் பெலப்படுவதேயன்றி ஆத்தும இரட்சிப்பைத் தேடவும் லௌகீகக் கவலைகளை அடக்கி நடக்கவும் ஒருபொழுதும் நமக்கு இடமுண்டாகமாட்டாது. தேவாராதனைக்குக் குறிக்கப்பட்ட நாளொன்றில்லாதிருந்தால் எப்பொழுதுஞ் சரீரத்துக்கு வேண்டியதைத் தேடப் பிரயாசப்படுவதேயன்றி ஆத்தும இரட்சிப்பைத் தேடப் பிரயாசப்படமாட்டார்கள். எந்நேரமுங் கருத்தரை நினைத்து அவரைப் பணிந்துகொண்டு அவருடைய சித்தத்தின்படி நடந்து தேவபத்தியுள்ளவர்களாய் இருப்பது உத்தமமான கடனாய் இருந்தாலும் நாம் உலக விசாரத்தை அடக்கி அவருக்கு ஆராதனை செலுத்த விசேஷமாகச் சில நாளைக் குறித்து வைத்தால் அந்த ஆராதனையைத் தகுதியானபடி செய்வதற்கு அந்நாட்கள் மிகுதியும் அமரிக்கையுள்ள சமயங்களாய் இருக்குமே. அப்படிக் கருத்தருக்கு ஆராதனை செலுத்தத் தகுதியான ஒழுங்கும் காலமும் இருக்கவேண்டியதென்று அஞ்ஞானிகள் முதலாய் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். கருத்தர் மனிதரெல்லாருக்குந் நன்மையாகக் கட்டளையிட்டருளின சத்திய வேதத்திலோ மனிதர் மெய்த்தேவனை வணங்கி மென்மேலுந் நல்ல அறிவை அடையவுந் தேவாராதனையைத் தடங்கலில்லாமற் செய்யவும் வாரத்திலொரு நாளை ஒப்புவுதாளாக விசேஷித்து

வைக்கவேண்டுமென்று கற்பிக்கப்பட்டிருக்கிறது. சரீர சுக போகவநித்திய வாழ்வுக்கடுத்தவைகளைப் பார்க்கிலும் ஆத்தும சுகாநந்த நித்திய வாழ்வுக்கடுத்த காரியங்கள் விசேஷித்த கனமானதாய் இருக்குமென்றாலும் மனிதர் இப்பிரவஞ்ச கருமங்களையே உறுதியும் பிரியமுமான மனதோடே நடப்பித்து மோட்சத்துக்குரிய எத்தனங்களை மறந்து போகிறார்கள். ஆகையாற்றான் அவர்களை நினைப்பூட்டவும் எழுப்பவும் நித்தியகாலமாய்ப் பிழைக்குஞ் சீவனுக்கடுத்த காரியங்களை அவர்கள் தியானித்துக்கொள்ளக் கற்பிக்கவும் ஒய்வுநாள் மிகவுந் தேவையாய் இருக்கிறது. இப்படித் தேவபத்திக்கடுத்தவைகள் வருத்திப்படையும்படி சமயமுண்டாய் இருக்கத்தக்கதாக ஏழு நாட்களிலொன்று ஒய்வுநாளாக நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நாம் வெளியரங்கமான ஆராதனை செலுத்தும்படிக்கு ஒரு நாள் ஒய்வுநாளாக நியமிக்கப்படாவிட்டால் மனிதர்கள் ஒருமித்துக் கூடி வரவும் ஏக சிந்தனையோடு தேவாராதனை நடத்தவுங் கூடியதாய் இராது. ஆகையால் எல்லாரும் ஒருமனப்பட்டுப் பராபரனுக்கு ஆராதனை செய்யக் கூடிவரும்படிக்குக் கருத்தருடைய ஒய்வுநாள் நியமிக்கப்பட்டது. அன்றியும் அனுதினமும் பிரயாசத்தோடே அலுவல் செய்பவர்களாகிய ஏழைகளுடைய சரீர இளைப்பாறுதலுக்கு ஆசோதையான வேளை தேவையுண்டே. அவர்கள் ஆறு நாளளவும் வருத்தப்பட்ட பிற்பாடு ஏழா

நாளென்கிற ஒய்வுநாளில் ஆசோதையாயிரு
ந்து இளைப்பாறினால் திங்கட்கிழமை காலையில்
மறுபடியும் வேலைக்குப் பெலத்தோடே போ
ய் உச்சாகத்தோடே பிரயாசப்படுவார்கள்.
அதை விட்டு வாரம் முழுதும் ஒயாமல் வருந்
தப்பட வேண்டுமாகில் அது ஆத்துமாவுக்கு
இளைப்புண்டாக்கிறது மல்லாமற் சரீரத்துக்கு
ஞ் சுகவீன முண்டாக்கும். ஆதலால் வேலை
செய்யும் மிருகங்களுக்கும் மனித சாதிக்கும்
ஒய்வுநாட் பிரயோசனமாய் இருக்கும். அதை
அறிந்தே பராபரன் நீ ஆறுநாளும் உன் வே
லையைச் செய்து ஏழாந் நாளிலோவெனில்
உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும்
உன் அடிமைப் பெண்ணின் பிள்ளையும் பர
தேசியும் இளைப்பாறவும் ஒய்ந்திருப்பாயாக
என்று கற்பித்தார். சிலர் அமவாசி பாட்டி
மை என்ற இரண்டு நாளும் பௌரணை பாட்
டிமை என்ற இரண்டு நாளும் ஆடி மாசத்தில்
இந்த நான்கு நாளிலும் அலுவல் செய்யலாகா
தென்றும் புத்தகம் முதலானதை வாசிக்கக்கூ
டாதென்றும் ஆசோதையாய் இருக்க வேண்
டுமென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதெ
ப்படி இருக்கின்றதென்றால் மாதமொன்றுக்
கு வார வட்டந் நான்கு அவற்றில் நான்கு நாள்
ஒய்வுநாளாகக் கைக்கொள்ளுகிறது நியாயந்
தானென்று சொல்வதைப்போலத் தானிருக்கு
ம். எவரும் இவ்வயணங்கள் எல்லாவற்றையுஞ்
யோசித்துப் பார்த்தாற் கருத்தருடைய ஒய்

வுநாளை ஆசரிப்பது நியாயமும் நலமுமாயிருக்கிறதென்று காணலாம்.

---

### இரண்டாவது.

எல்லாரும் ஒய்வுநாளை ஆசரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறார்களென்பது.

ஒய்வுநாளை விசேஷித்ததாக வைத்தது நியாயமாய்க் காணப்படுவதினாலும் ஆண்டவராகிய கருத்தாவின் கட்டளையாய் இருக்கிறபடியாலும் அந்தக் கற்பனையைக் கைக்கொள்ள நாமெல்லாருங் கடனாளிகளாய்த்தானிருக்கிறோம். அந்தக் கற்பனை யூதர்களுக்குக் கட்டளையிடப்பட்ட தேவாராதனைப் பிரமாணத்தில் மாத்திரமல்ல, அவர்கள் கைக்கொண்ட சடங்கு நியாயப்பிரமாணங்களில் மாத்திரமல்ல, எல்லாச் சாதிக்கும் பொதுவாய் அழிக்கப்பட்ட நன்னடக்கைப் பிரமாணமாகிய பத்துக் கற்பனைகளிலுங் கூடச் சொல்லப்படுகின்றது. மனிதர் எல்லாருங் கொலை களவு செய்யாமலுந் தேவதூஷணம் பொய்ச்சாட்சி இவைகளைச் சொல்லாமலும் இருக்கவேண்டுமென்பதைப்போலத் தானே ஒய்வுநாளையும் ஆசரிக்கவேண்டுமென்றுங் கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறது.

மேற் சொன்னபடி உலகந் தோன்றினபொழுதே ஒய்வுநாள் ஆசரிப்புக் கட்டளையிடப்பட்டதேயல்லாமல் உலகந் தோற்றி, ௨௲. வருடத்துக்குப் பின்னிருந்த யூதர்களுக்குமாத்திரம் இடையிட்டு இடப்பட்ட கட்டளையென்று

கருத வேண்டாம். உலகம் உண்டாகையில் தா
னே ஓய்வுநாளையும் நியமித்து அந்த நியமத்
தை நிலைபெறும்படி செய்ய ஓய்வுநாளைப் பரி
சுத்தமாய்க் கைக்கொள்ள நினைப்பாயாகவெ
ன்று திரும்பவுங் கற்பித்திருக்கிறது. காரியம்
இப்படியிருப்பதினால் எல்லாத் தேசத்தாருங்
கொலை களவுமுதலான பாதகத்தைச் செய்யா
திருக்கக் கடனாளிகளாய் இருக்கிறதுபோலக்
கருத்தருடைய ஓய்வுநாளை ஆசரிக்கவுங் கட
மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

மேலுங் கருத்தர் இந்தக் கற்பனையை உறு
திப்படுத்தும்படியாக நீ நம்முடைய பரிசுத்த
நாளிலே உனக்கு இச்சையானதைச் செய்யாத
படிக்கு உன் காலை ஓய்வுநாளுக்கிடறாய் வை
யாமல் ஓய்வுநாளை மன மகிழ்ச்சியென்றுங்
கருத்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ளநா
ளென்றுஞ் சொல்லி உன் சொந்தப் பரிட்சை
களின்படி செய்யாமலும் உனக்கு இச்சையா
னதைத் தேடிப் பிடியாமலும் உன் சுய பே
ச்சுக்களைப் பேசாமலும் அதை மகிமையாக
எண்ணி நடந்தாயானால் அப்போது நாம் உ
ன்பேரிலே மனமகிழ்ச்சியாய் இருப்போமெ
ன்று திருவுளம்பற்றினார்.

உங்கள் பராபரனாகிய கருத்தர் நாமே நீங்
கள் நம்முடைய கட்டளைகளைக் கேட்டு நம்
முடைய நியாயங்களைக் கைக்கொண்டு அவை
களின்படியே செய்து நம்முடைய ஓய்வுநா
ட்களைப் பரிசுத்தமாக்குங்கள். நாம் உங்கள்
பராபரனாகிய கருத்தரென்று நீங்கள் அறியு

ம்படிக்கு அவைகள் நமக்கும் உங்களுக்கும் நடுவான அடையாளமாய் இருக்குமென்றுந் திருவுளம்பற்றியிருக்கிறார்.

எசேக்கியேல். ௨௰, ௰௯, ௨௰, நீங்கள் ஓய்வுநாளிலே சுமைகளை எடுத்து அவைகளை எருசலேமின் வாசல்களுக்குட் கொண்டு வராதபடிக்கும் ஓய்வுநாளிலே உங்கள் வீடுகளில் இருந்து சுமையை வெளியே கொண்டுபோகாதபடிக்கும் ஒரு வேலையையுஞ் செய்யாதபடிக்கும் உங்கள் ஆத்துமங்களுக்காக எச்சரிக்கையாய் இருந்து நாம் உங்கள் பிதாக்களுக்குக் கற்பித்தபடி ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குவீர்களாக என்றும், எரே ௰௭. ௨௧. ௨௨. நம்முடைய ஓய்வுநாட்களைக் கைக்கொள்ளக்கடவீர்களாக. ஏனெனில் நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கருத்தரென்று நீங்கள் அறிவதற்கு அது உங்கள் தலைமுறைதலைமுறையாக நமக்கும் உங்களுக்கும் உண்டான அடையாளமாயிருப்பதாக. ௨. மோசே. ௩௧. ௰௩.

இந்த வசனங்களை உற்றுப் பார்த்தால் ஓய்வுநாளைக் கைக்கொள்பவர்கள் மெய்த்தேவனாகிய பராபரனுக்கு ஆராதனை செய்து அவருக்குப் பிரியமான சனமாய் இருக்கிறார்களென்றும் அதை அசட்டைபண்ணிக் கைக்கொள்ளாமற் போகிறவர்கள் தங்களை அவருடைய சத்துருக்களாகக் காண்பிக்கிறார்களென்றும் விளங்கும்.

இனி அதிகமாய் எழுநாட்களில் ஒன்றை ஓய்வுநாளாக விசேஷித்து வைத்தது நம்மை

நாமென்றும் அதைக் கைக்கொள்ளும் பேருக்கு வாழ்வும் அதைக் கைக்கொள்ளாத பேருக்குக் கேடும் உண்டாகுமென்றும் எடுத்துச் சொல்லத் தேவையில்லை, பூரணமாய்த் தெரியப்படும்.

---

## மூன்றாவது.

ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டியவிதம் எப்படியென்பது.

௧. வது. அந்நாளிலே விசேஷமாய்ச் செபத்தியானம் பண்ணவேண்டும்.

மனமகிழ்ச்சியுடனே பராபரனுடைய குணங்களையும் அவருடைய கிரியைகளையும் நினைத்து அவருடைய வசனத்தை வாசித்துத் தியானித்தும் அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற இரட்சகரையும் அவரால் உண்டான இரட்சிப்பையுஞ் சிந்தித்தும் நமது இருதயம் அந்த நிலையில் நிற்கிறதோ இல்லையோவென்று ஆராய்ந்தும் அதிற் காணுங் குறைச்சல் நீக்கும்படிக்குக் கருத்தரை உருக்கமாய் வேண்டிக்கொள்ள வேண்டியது. மனிதர் இப்படிப் பராபரனுடனே நெருங்கிய ஐக்கமாயிருந்து பரம காரியங்களைத் தியானித்துக்கொள்வதினால் அதிக தேவபத்தியாய் இருக்கவும் ஆத்துமகாரியங்களில் முயற்சிப்படவும் எழுப்பப்படுவார்கள். ஆகையால் ஓய்வுநாள் கருத்துடனே செபம்பண்ணவும் மேவ

தகாரியங்களைச் சிந்தித்துப்பார்க்கவுந் நல்ல சமயமாம்.

உவது. நமது பிள்ளைகளையுங் கீழ்ப்பட்டோரையும் போதிக்கவும் அவர்களை நன்னெறியில் நடத்தவும் அந்நாளிற் பிரயாசப்படவேண்டும். அவர்கள் சரீரங்களுக்கு வேண்டிய அன்னவஸ்திரம் முதலியவைகளைக் கொடுக்கிறது நமக்குத் தகுதியாயிருக்குமானால் அவர்கள் ஆத்தும நயத்துக்காகக் கவலைப்படுகிறது அதிக நியாயமும் யோக்கியமுமாயிருக்குமென்பதைச் சொல்லவேண்டியதென்ன! மற்ற நாட்களிலும் நம்மால் இயன்றமட்டும் அவர்களோடும் அவர்களுக்காகவுஞ் செபம்பண்ணவேண்டியதாம். ஓய்வுநாளிலே லவுகீக அலுவலும் விசாரமுமில்லாததினால் மிகுதியும் நமக்கு அடுத்தவர்களைக் கூட்டிக்கொண்டு செபம்பண்ணவும் அவர்களுக்கு நற்புத்திசொல்வி அவரவரை எழுப்பிக்கொள்ளவும் பலயீனருக்கு ஆறுதல் செய்யவும் அடங்காத துற்குணரைக் கடிந்துகொள்ளவும் வேண்டும். அப்படிச்செய்யக் கடனாளிகளாய் இருக்கிறோமென்று, ௫. மோசே, ௬. ௬. ௭. வசனங்களிலே தெரியவரும். அவையாவன, இன்று நான் உனக்குக் கற்பிக்கிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும் வழியிலே நடக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு என்பதாம்,

மற்றக் கிறிஸ்தவர்களுடனே தேவாலயத்திற் கூடிவந்து கருத்தருக்கு ஆராதனை செய்யவேண்டும். அவர் எங்களை உருவாக்கிப் பராபரித்துக் காத்துவருகிற எசமானாகவும் நமக்கு வேண்டிய கற்பனைகளை அருளிச்செய்தவராகவும் இருக்கிறபடியினாலே நாம் அவரை நம்பவும் அவரில் அன்புகூரவும் கடனாளிகளாய் இருக்கிறோம்: எப்பிரகாரத்திலும் நாம் பராபரனுடைய ஊழியக்காரரென்று அறிக்கைவிட்டு மற்றவர்களுக்கு நன்மாதிரியைக் காண்பிக்கப் பிரயாசப்படவேண்டும். மேலும் நமக்காகமாத்திரமல்ல, மற்றவர்களுக்காகவும் கவலைப்பட்டு நமது பிள்ளைகளையும் வேலைகாரரையுஞ் சார்பிலிருக்கிற எல்லாரையுங் கூட்டித் தேவாலயத்திற்குக் கொண்டுவந்து அவர்கள் பரம இரகசியங்களை அறிதற்கான வகைகளைச் செய்யவேண்டும். பராபரன் எல்லாமனிதருந் தம்முடைய சனத்தைக் கேட்கவுந் தமக்கு இஸ்தோத்திரஞ் செலுத்தவும் ஏகமாய்க் கூடிவரவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார். அந்த விதி எல்லாக்காலங்களிலும் பிரயோசனமும் நியாயமுமாயிருந்தாலும் விசேஷமாக ஓய்வுநாளிலே அவருடைய அன்பருக்கு மகா இன்பமாயிருக்கும். அப்படியே, ௩. மோசே, ௨௩. ௩. வசனத்தில் ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக. ஏழாந் நாளோவெனிற் சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாள். அதில் ஒரு வேலையையுஞ் செய்யீர்களாக. அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கருத்தருக்கென்று ஓய்ந்திருக்கும்

நாளாயிருப்பதாகவென்று சொல்லியிருக்கின்
றது. ஆகையால் நீங்களும் தனித்திருக்கும்
பொழுதும் உங்கள் சமூசாரத்தோடிருக்கும்
பொழுதும் தேவாலயத்திற்கு வரும்பொழு
துங் கருத்தருடைய ஓய்வுநாளை வீணிலே போ
க்காமல் தேவ பத்தியுடனே எப்பொழுதும் ஆ
சரிப்பீர்களாக. கருத்தரை இஸ்தோத்திரிக்கி
றதற்கும் நம்முடைய ஆத்துமாவைப் பிழைப்
பிக்கிறதற்கும் ஓய்வுநாளை விசேஷித்து வைத்த
தினாலே பயிரிடுகிறதுந் தண்ணீர்பாய்ச்சுகிறது
ம் அறுக்கிறதும் வீடுகட்டுகிறதும் விற்பனவு
கொள்வனவு நடப்பிக்கிறதும் அவைகளை நட
ப்பிக்க யோசனைபண்ணுகிறதும் விருதாவான
வைகளைப் பேசுகிறதும் பிரயாணஞ்செல்கிற
தும் வேடிக்கையாக உல்லாசமாக உலாத்துகி
றதுந் திருவிழாக் கூத்துப்பார்க்கப்போகிறது
ம் ஆடல் பாடல்செய்கிறதுங் கேவாத்தியங்க
ளை ஆர்ப்பரிக்கிறதும் வேட்டையாடப் போ
கிறதும் மற்றும் இப்படிப்பட்ட கருமங்களெ
ல்லாத்தையும் அந்நாளிலே செய்வது சரியல்
ல. வியாபாரஞ்செய்தல் முதலான லவுகீக அ
லுவல்களைப் பார்ப்பதும் ஓய்வுநாளுக்கு அடா
த்தாமென்று ஒரு சரித்திரத்திலே தெளிவாய்ச்
சொல்லியிருக்கிறது. அதென்னவெனில், மு
ற்காலத்திலே யூதர் புறச்சாதியாரைப்போல
ஓய்வுநாளிலே விற்பனவு கொள்வனவு நடப்
பித்துப் பாவஞ் செய்து வந்தபொழுது யாவா
பராலுடைய கட்டளைப்படி நடந்த தேவபத்
தியுள்ள நேகேமியா அவர்களை நோக்கி நீங்

கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் கொலைச்சலாக்கு
கிற இந்தப் பொல்லாத செய்கை என்ன! உ
ங்கள் முன்னோர் இப்படிச் செய்ததினால் நமது
பராபரன் உங்கள் மேலும் இந்தப் பட்டின
த்தின் மேலும் வெகு தீங்குகளை வரப்பண்ணி
னாரே, ஐயோ! இன்னமும் அப்படியே ஓய்
வுநாளைப் பரிசுத்தக் கொலைச்சலாக்கி என் இ
ஸ்ரவேலின் மேற் கொண்ட உக்கிரத்தை வர்
த்திக்கப்பண்ணுகிறீர்கள் என்று சொல்லி ஓய்
வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடி
க்கு வாசலண்டையிலே தன் வேலைகாரரிற் சி
லரைக் காவலாய் நிறுத்தினார். நெகேமியா,
௰௩ ௰௯. ௨௧.

மற்றும் நாட்களில் லௌகீகத்துக்கு அடுத்த
பல்பல காரியங்களையும் பேசிக்கொண்டிருப்
பதுபோல அந்த நாளிலுஞ் செய்யாமல் நா
வையடக்கிப் பரம காரியங்களுக்கு அடுத்ததி
ன் பேரிற் சம்பாஷிப்பதினால் ஒருவரையொ
ருவர் எழுப்பிக்கொள்ளக் கவனமாய் இருக்க
வேண்டும். இருதயத்தின் பரிபூரணத்தின்ப
டியே வாய் பேசுமென்பதால் இருதயத்தை
ப் பத்திரத்தோடே காக்கத் தேவையாம். ச
னிக்கிழமை சாயங்காலமாகிற பொழுது கருத்
தருடைய ஓய்வுநாள் அடுத்திருக்கிறதென்று
சிந்தித்து அதை ஒழுங்கின் பிரகாரமாக ஆ
சரிக்கும்படிக்கு உலக விசனக் கவலைகளை அ
கற்றித் தெளிந்த சிந்தையும் அமைந்த மன
துங் கொண்டிருப்பதுக்கும் பரம இராச்சிய
த்துக்கு அடுத்தவைகளைத் தியானித்துக்கொ

ள்வதற்குங் கிருபையுள்ளவராகிய பராபரனைச்
சேவிப்பதற்குங் கூடியமட்டும் உங்களை ஆய
த்தம் பண்ணுவது நலமான காரியம். சிலர்
இதையெல்லாங் கேட்கும்பொழுது ஓய்வுநா
ளை ஆசரிக்கவேண்டிய விதம் இப்படியானாற்
கிறிஸ்தவர்களென்று சொல்லப்பட்டவர்கள் எ
ல்லாரும் இந்தக் கட்டளையை இவ்வளவு பத்
திரத்தோடே கைக்கொள்ளுகிறார்களோ? எ
ன்று விசாரிப்பார்கள். மெய்தான் அநேகர்
தாங்கள் கிறிஸ்தவர்களென்று நினைத்தாலும்
வெட்கங் கெட்டவர்களாய்க் கருத்தருடைய
கற்பனையை மீறி ஓய்வுநாளைக் கைக்கொள்ளா
மற் போகிறார்கள். அவர்கள் அப்படிச் செ
ய்தாலும் அவருடைய கற்பனை மாறிப் போ
மா? இல்லை. அது நிலையாகவே நிற்கும். அ
வர்களோ தங்கள் பாவங்களுக்காக நீதியுள்ள
கருத்தரால் எக்காலஞ் சென்றுந் தண்டிக்கப்
படுவார்கள். ஆகையால் நீங்கள் பாவஞ் செ
ய்யத் துணிகரமுள்ளவர்களாகாமல் ஆண்டவ
ரால் அருளிச் செய்யப்பட்ட கற்பனையைத்
தப்பவிடாமற் கைக்கொண்டு பரிசுத்த ஆவி
யின் ஒத்தாசையினால் எச்சரிப்படைந்து நட
க்கப் பாருங்கள்

ஓய்வுநாளிலே பயிருக்குத் தண்ணீர் இறை
க்கவேண்டாமென்றும் வேறு அலுவல்களைச்
செய்யப் போகாதென்றுஞ் சிலர் கேள்விப்ப
டும்பொழுது அப்படி இருந்தால் எங்களுக்கு
ச் சீவனம் எப்படி நடக்குமென்றுங் கேட்பா
ர்கள். ஐயோ! மனிதருக்கு உண்டாயிருக்கிற

சுகமும் பெலனும் பராபரனுடைய ஆசீர்வாதத்தினால் உண்டாயிருக்கிறதே அன்றி அவர்களுடைய சுய பிரயாசத்தினால் உண்டாயிருக்கிறதில்லையே. பின்னை அவருடைய கற்பனைகளை மீறிக் கைக்கொள்ளாமல் நடப்பதினாலோ, அவருடைய திருவசனப்படி நடந்துகொள்வதினாலோ, அவருடைய கிருபையுள்ள ஆசீர்வாதம் உண்டாகும். ஒருவன் நான் அநியாயமுந் திருட்டுத்தனமுஞ் செய்யாவிட்டால் என் சீவனம் நடவாதென்று சொல்லுகிறது அவன் செய்கிற பாதகத்துக்குப் போக்காயிராதே. அப்படிப்போல ஒருவன் வேலை இல்லாவிட்டால் வரத்துமில்லையே என்றுகொண்டு ஓய்வுநாளிலும் வேலைசெய்து உலக இலாபத்தைச் சம்பாதித்தாலும் அந்த இலாபத்தோடே கருத்தருடைய சாபமுங் கூடத்தானிறங்கும். சகல நன்மையையும் அருளிச் செய்கிற பராபரன் சொல்லுகிறபடி அமைந்து நடப்பதே நன்மை. அமையாமையே தீமை. இவை தெளிவாயிருக்கின்றன.

---

நாலாவது.

பரிசுத்த ஓய்வுநாளை ஆசரிக்கிறதினால் உண்டாகிற பலன் என்னவென்பது.

௧. பராபரனை அறிகிற அறிவும் அவருடைய திருவசனத்திற்கு இயைந்த நற்குணங்களும் வர்த்திக்கும். இதற்காகவே ஓய்வுநாள் நியமிக்

கப்பட்டது. மனிதர் உலககாரியங்களை முயற்சிபண்ணுவதினால் அவைகளில் தேறிக்கொள்வது போல ஓய்வுநாளுக்குரிய தேவாராதனை முதலியவைகளை நடப்பித்து வருவதினால் மென்மேலுந் தேவபத்தியிலும் வளரலாம். அன்றியும் உங்கள் ஆத்துமா நிறைந்த சந்தோஷம் பொருந்தியிருக்கும். யாதொருவன் ஆத்துமாவுக்கு நிறைந்த சந்தோஷமும் பாக்கியமுங் கிடைத்ததில்லையென்று சொல்வானாகில் அவன் ஓய்வுநாளைத் தகுதியானபடி ஆசரிக்கவில்லையென்று நினைக்கவேண்டும். ஓய்வுநாளை முழு மனதோடே ஆசரித்துக் கருத்தர் நியமித்திருக்கிற மற்ற எத்தனங்களை ஒழுங்காய் நடப்பித்து வந்தாற் கிறிஸ்துநாதரால் உண்டான இரட்சண்ணியம் உங்களுடைய தென்றும் நீங்கள் அவரால் இரட்சிக்கப்பட்ட நித்திய பாக்கிய சுதந்தரவாளிகளாய் இருக்கிறீர்கள் என்றும் உணர்ந்துகொள்ளும் ஆறுதலை அடைவீர்கள்.

௨. கருத்தருடைய குறைவற்ற ஆசீர்வாதம் உங்கள் பேரிலும் உங்கள் செய்கை முதலானவைகள் மீதிலும் வரும். அவருடைய கட்டளையின்படி நீங்கள் அவருடைய ஓய்வுநாளை மன மகிழ்ச்சியுடனே கொண்டாடி அவருக்கு மகிமை செலுத்தினால் அவர் உங்களை ஆசீர்வதிப்பார். மேற்சொல்லியபடி உங்கள் ஆத்துமாவுக்கு உண்டாகுஞ் சீரே அல்லாமலும் உங்கள் சரீரத்திற்கும் அவருடைய ஆசீர்வாதங் கிடைக்கும். இருநூறு வருஷத்

திற்கு முன்னே ஏல் என்னும் நாமமுடைய ஒரு நியாயாதிபதி இருந்தார். அவர் தாம் ஒய்வுநாளை ஆசரித்துக் கைக்கொள்ளுஞ் சாக்கிரதை எவ்வளவுண்டோ அவ்வளவாக அடுத்த வாரத்திலே தன் அலுவல்கள் வாய்க்கும் என்று சொன்னார் அப்படியே உங்களுக்கும் எல்லாம் வாய்க்கவேண்டுமாகிற் கருத்தருடைய ஒய்வுநாளைப் பரிசுத்தமாக நினைப்பீர்களாக.

௯. ஒய்வுநாளை ஆசரிப்பதினால் நீங்கள் இருக்கும் நாட்டுக்கும் பாக்கியமுண்டாகும். எப்படியெனில் அஞ்ஞானிகள் கருத்தருக்குப் பயப்படாமலும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமலுந் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தித் தங்களைப் பொல்லாப்புக்கு ஒப்புக் கொடுக்கும் பொழுது அவர்கள் ஆத்துமம் நட்டம் அடைவதுமல்லாமல் ஒருவருக்கொருவர் மோசமுங் கெடுதியுமுண்டாக்குவார்கள். அப்படியே எந்தத் தேசத்தார் கருத்தருடைய ஒய்வுநாளின் கட்டளையைக் கடந்து அசட்டைபண்ணுகிறார்களோ அவர்கள் சகல பாவத்தினாலும் நிறையப்பட்டவர்களும் வெட்கங் கெட்ட துரோகிகளுமாய் இருக்கிறார்கள். எந்தத் தேசத்தார் கருத்தருடைய ஒய்வுநாளை ஒழுங்காய் ஆசரித்துக்கொண்டு வருகிறார்களோ அவர்கள் தங்களுக்குள்ளே சமாதானமும் யோக்கியமுமாய் நடந்து மற்றவர்களுக்கு நலமும் நியாயமுஞ் செய்து கருத்தருடைய ஆசிர்வாதத்தை அடைகிறார்கள். ஆகையால் நீங்கள் இருக்கிற நாட்டுக்குச் செ

ல்வமுந் நலமும் வர விரும்பினீர்களானால் எல்லாரும் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய்க் கைக்கொள்ள வகை தேடிச் சனங்களுக்குப் புத்தி சொல்லி நல்ல மாதிரி காட்டுங்கள். ஆண்டவருடைய பரிசுத்த கட்டளையை மீறி நடப்பவர்களுக்கு அவருடைய நீதியுள்ள கோபாக்கினை சம்பவிக்கிறது ஆச்சரியமல்ல! சருவத்துக்கும் கர்த்தாவாயிருக்கிற பராபரன் அருளிச் செய்த முக்கியமான கட்டளையை இந்தத் தேசத்திலே அநேகர் மதியாமல் அவருடைய ஓய்வுநாளைப் பரிசுத்த கொலைச்சலாக்கி மற்றுந் நாட்களைப் போல லௌகீக அலுவல்களிலுஞ் சிற்றின்பங்களிலுஞ் செலவளிக்கிறார்கள். சனங்கள் அந்தக் கற்பனையை அறியார்கள். அதினாலே தான் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவில்லையென்று ஒருவன் அவர்களுக்காகப் போக்குச் சொன்னால் அந்தக் கற்பனை அநேகருக்குத் தெரியாதென்பதும் மெய்தான். ஆகிலும் புஸ்தகங்கள் கொடுப்பதினாலும் மற்ற எத்தனங்களாலும் அறிவிக்கப்பட்ட பிற்பாடுதான் எல்லாரும் அதின்படி நடக்க மனதுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? இல்லையே. ஐயோ! எல்லாரையும் அறிந்திருக்கிற சருத்தர் தம்முடைய ஓய்வுநாளைக் கைக்கொண்டவர்கள் இன்னாரென்று கவனமாய்ப் பார்க்கவுந் தம்முடைய ஓய்வுநாளைப் பரிசுத்தஞ் செய்ய நாடித் தேடுகிறவர்கள் தமக்குச் சொந்தமானவர்கள் என்று சந்தோஷிப்படவுந் தானே ஒரு குறிப்புக்குத் தம்முடைய ஓய்வு

நாளை நியமித்து வைத்தார். அது மெய்த் தேவபத்தி உள்ளவர்களுக்கு ஒரு அடையாளக் கொடியைப் போலிருக்கும். ஆகையால் நீங்கள் எல்லாரும் அவருடைய வசனத்தைக் கருத்தாய்ச் சிந்தித்து அதின்படி நடப்பீர்களாக.

---

## தன் பிழை உணர்த்தல்.

ஆ! கருத்தாவே என் நாட்களுங் காலங்களும் எல்லாம் தேவரீருடையதாய் இருக்கக்கொள்ள ஏழுநாட்களில் ஒன்றை உமக்குப் பணி செய்ய விசேஷித்து வைத்தோமென்று எனக்குக் கட்டளை இடும்பொழுது அதை உற்சாக மனதோடே அதிற் செலுத்தாமல் விசனமுந் தாமதமுமான விதமாய்ச் செலுத்தவேனோ! என் ஆத்துமாவைப் பரிசுத்தத்தில் வளர்ப்பதற்கும் பரம பாக்கியத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கும் வாரத்தில் ஒரு நாளே உள்ளதென்று நினைத்துத் தேவாராதனை முடிந்தவுடனே இன்றைக்கு ஓய்வுநாளுக்கு அடுத்த முயற்சிகள் எல்லாஞ் செய்து முடித்துக்கொண்டேன். இனிப் போதுமென்று எண்ணுவேனோ? நான் அப்படிச் செய்கிறவனாய் இருந்தால் என்னிடத்திலே உண்மையும் உறுதியுமுண்டோ? என்னை இடைவிடாத பத்தியுள்ளவனென்று சொல்லலாமா? தேவவணக்கத்திற்கு உரிய கிரியைகளின் பேரில் அன்பாய் இருக்கிறேனென்று

சொல்வதற்கு நியாயமுண்டா? ஆ! கிருபை யுள்ள ஆண்டவரே தேவரீருடைய உண்மை யள்ள கற்பனையை என் மனதிற் பதித்து உம் முடைய பரிசுத்த ஆவியினாலே பலப்படுத்தி உமது வேதப்பிரமாணத்தின்படி நடக்க என க்கு உதவி செய்தருளாம். மனிதரை இடே ற்ற மரித்து உயிர்த்தவராகிய இயேசுநாதர் மூலமாய் என்னை ஆசீர்வதித்துப் பரம பாக் கிய நித்திய ஆனந்த சுக வாழ்வுக்குப் பாத்திர னாக்கிச் சேர்த்துக்கொள்ளுஞ் சுவாமி, ஆமென்.

---

முற்றிற்று.